


AMNESTY
INTERNATIONAL

… சித்ரவதைக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பன ஒன்று இல்லாமலும் அல்லது பின்பற்றப்படாமலும் இருந்துவருகின்றன … இதனால் சித்ரவதை என்பது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் என்றப் பின்னணியில் வழக்கமாகவும் இயல்பாகவும் நடக்கின்ற ஒரு விஷயமாகிவிட்டது.

சித்ரவதை தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கை,
(2007ல் மனித உரிமை சபையில் சமர்ப்பித்த அறிக்கை)

# இலங்கை

## யுத்தம் தீவிரமடைந்துவரும் நிலையில் பொதுமக்களின் பாதுகாப்பு குறித்த அச்சங்கள் மேலோங்கிவருகின்றன

இலங்கையில் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டுப் போர் நீடித்துவருகிறது. அரச படைகளுக்கும் தனிநாடு கோரி போராடிவரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையிலான இந்த மோதல்கள் கடந்த ஆகஸ்ட் 2006 முதல் உக்கிரமடைந்துள்ளன. இந்நிலையில், பொதுமக்களின் பாதுகாப்பு குறித்த கவலைகள் அதிகரித்துள்ளன.

மோசமான மனித உரிமை துஷ்பிரயோகங்களையும், சர்வதேச மனிதாபிமான விதிமுறைகளையும் இருதரப்பினரும் செய்துவருகிறார்கள். ஆட்கடத்தல்கள், சட்டவிரோத ஆட்கொலைகள், யதேச்சதிகார கைதுநடவடிக்கைகள் மற்றும் சித்ரவதைகள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

இப்படியான வன்குற்றங்களைச் செய்தவர்களில் மிகச் சிலரே சட்டத்தின் முன் நிறுத்தபட்டுள்ளனர்.

- இந்த உள்நாட்டுப் போர் ஆரம்பித்தக் காலத்திலிருந்து இதுவரை குறைந்தபட்சமாக 80,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற நேர்ந்துள்ளது.

- 2007க் கடைசி வரையில் மட்டும் என்று கணக்கில் கொண்டால், 5,516 ஆட்கட த்தல் சம்பவங்கள் தீர்க்கப்படாமலேயே இருந்துவருவதாக ஆட்கடத்தல் மற்றும் ஒருவர் தனது சுய விருப்பத்திற்கு மாறாக காணாமல்போதல் தொடர்பான ஐ.நா.மன்ற செயல் அணி விபரம் தெரிவிக்கிறது.

## நீங்கள் செய்யக்கூடியது என்ன?

- இலங்கையின் மனித உரிமை நிலவரம் பற்றிய மேலதிக விபரங்களை அறிய சர்வதேச பொதுமன்னிப்பு சபையின் இணையதளத்தைப் பார்க்கவும்: **www.amnesty.org**

- பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி இலங்கை அரசுக்கும் (**prsec@presidentsoffice.lk**) விடுதலைப் புலிகளுக்கும் (**hrnews.eelam@gmail.com**) எழுதவும்:
  - சர்மதேச மனித உரிமைச் சட்டங்களையும் மனிதாபிமான விதிமுறைகளையும் மதிக்கவேண்டும்.
  - சட்டவிரோத ஆட்கொலைகள், ஆட்கடத்தல்கள் சித்ரவதைகள் போன்றவற்றை உடனடியாக நிறுத்தவேண்டும்.

**இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல்கொடுங்கள்**

AMNESTY INTERNATIONAL

Amnesty International, International Secretariat, Peter Benenson House, 1 Easton Street, London WC1X 0DW, United Kingdom. Index: ASA 37/022/2008

Photo: Man with portrait of his unlawfully killed son, Batticaloa. © Stephen Champion